

# பனிமயம்

ஜூலை 2026

ஆண்டுச் சந்தா
ரூ. 100/-

தனிப் பிரதி
விலை ரூ. 10/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

## யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

பனிமய வாசக அன்பர்களுக்கு எனது பணிவான செபத்துடன் கூடிய வாழ்த்துகள். தங்களை 'மறைபரப்புப் பணி' என்னும் ஏட்டின் வழியாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

நம் ஆண்டவர் நம் எல்லோருக்கும் மூன்று கட்டளை கொடுத்தார்.

1. ஒருவர் மற்றவரை அன்பு செய்யுங்கள் (யோவான் 13: 34-35). பிரதான, இறைவாக்கும், திருச்சட்டமும் இதிலேதான் அடக்கம். ஒவ்வொரு கிறிஸ்தவனில் மேல் சுமத்தப்பட்ட பணி.
2. இதை என் நினைவாகச் செய்யுங்கள் (லூக் 22:19). இந்த அப்போஸ்தல அலுவல் தான் திருஅவையில் முதன்மையான பணி.
3. படைப்பிற்கெல்லாம் சென்று, நற்செய்தியை அறிவியுங்கள் (மாற்கு 16:15). திருமுழுக்கு பெற்ற அனைவருக்கும் கொடுக்கப்பட்ட பிரதான பணி.

இம்முப்பணி கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு, அவரைப் பின்பற்றும் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட கடமை. இதில் திருச்சபை வளரவும், நின்று நிலைபெறவும் எல்லா நற்செய்தியிலும் இறுதி வேண்டுகோளாக கிறிஸ்து முன் வைக்கிறார்.

ஏன் திருச்சபை வளர வேண்டும்? கிறிஸ்துவின் இறையாட்சி, மதிப்பீடுகள் உலகத்தின் மனச்சான்றாய் கோலோச்ச வேண்டும். மண்ணிடை இயேசு மறுபடி வருவார் என்ற சத்தியத்தில் மக்களை நிலைநிறுத்தி பாவத்திற்கும், பழிக்கும் அஞ்சும் நல்ல மனச்சான்றை உருவாக்கவும், நற்செய்தி அறிவிப்பு செய்ய வேண்டும்.

இக்கடமை, அழைக்கப்பட்ட குருக்கள் - துறவிகள் - ஆயர்கள் - திருத்தந்தையருக்கு மட்டுமா? கிறிஸ்து இயேசுவில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவருக்கும் உண்டு. ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பங்களும் இதனை வாழும் சூழலில் நற்செய்திக்கு சான்று பகரவும், அன்பியங்களில், வேலை செய்யும் அலுவலகங்களில், பிறரை சந்திக்கும் இடங்களில், வழிபாட்டில் சொல், செயலின் கிறிஸ்துவை வெளிக்கொணர வேண்டும்.

கிறிஸ்துவைப் பற்றி வார்த்தையினால், நடத்தையால் தனித்தன்மை விளங்கச் செய்ய வேண்டும். கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு நம்மைப் பார்த்து ஒரு ஈர்ப்பு இருக்க வேண்டும். நற்செய்தியில் உள்ளவை நமது சொல், செயலில் கிறிஸ்துவுக்கு சான்றாக வேண்டும். இதனால் கிறிஸ்துவை பலர் அறிய வருவர். அவரை ஏற்றுக்கொள்வர். அவரவர் வாழ்வில் மாற்றத்தைக் காண்பர்.

கிறிஸ்துவை அறிந்து, அவரால் மீட்கப்பட்ட நாம், அவரின் நன்மைத்தனத்தை, நான் அனுதினமும் அனுபவிக்கும் இன்பத்தை உலகறியச் செய்வோம். நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். எல்லோரும் இன்புற்றிருக்க இயற்கையும் இறைவனும் மனித குலத்திற்கு இன்முகம் காட்டட்டும்.

மாத இறுதியில் நாம் பனிமய அன்னையின் பெருவிழாவைக் கொண்டாட இருக்கிறோம். பெருவிழா நாள்களில் நடைபெறும் அனைத்து வழிபாடுகளிலும் கலந்து கொண்டு அன்னையின் ஆசிகளைப் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

தங்கள் அன்புடன்,

**அருள்தந்தை S. ஜான்செல்வம்**

திருத்தல அதிபர் & பங்குத்தந்தை






உதயம் 27 தாரகை 11

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. S. ஜான் செல்வம்**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. S. ஜான் செல்வம்



**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 100

முகவரி : 'பனிமயம்'
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
✆ 82209 47823, www.snowsbasilica.com


## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### மானுட வாழ்விற்கு மதிப்பு தந்திட...

மானுட வாழ்வு கடவுளிடம் இருந்து கிடைத்த கொடை என்பதைக் கண்டுணர்ந்து, அதன் அனைத்து நிலைகளிலும் மதிப்பும் பாதுகாப்பும் பெற்றிட இறை வேண்டல் செய்வோம்.

# உள்ளே...



மரியாவின் மாண்புகள் 4


தரிசனம் தருவாய் தாயே... 6


இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் 8


நற்செய்திப் பணியில் இறையாட்சியின் மகிழ்ச்சி 10


நற்செய்திப் பணி 12


விடிவெள்ளியின் விழா 14


விவிலியப் போட்டி 16

பனிமயப் பகிர்வு 19


பனிமய பல்சுவை நிகழ்ச்சி 2026 21



# மரியாவின் மாண்புகள்

## 1 புதிய ஏவாள்

அன்னை மரியாவுக்குக் கொடுக்கப்பட்ட தொன்மையான பெயர்களுள் ஒன்று அவர் புதிய ஏவாள் என்பது. முதல் நூற்றாண்டிலிருந்தே இந்தப் பெயர் வழக்கிலிருந்தது என்னும் செய்தி நமக்கு வியப்பைத் தரலாம். தொடக்ககாலத் திருமறைத் தந்தையருள் ஒருவரான மறைசாட்சி புனித **ஜஸ்டின்** (கி.பி. 100-165) தமது "ட்ரைபோவுடன் உரையாடல்" (Dialogue with Trypho) என்னும் நூலில் அன்னை மரியாவை ஏவாளுடன் ஒப்பிட்டு எழுதியுள்ளார்.



அவரைத் தொடர்ந்து இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித **ஐரேனேயஸ்** (கி.பி. 130 – 203) அன்னை மரியாவைப் "புதிய ஏவாள்" என்று அழைத்தார். பவுல் உரோமையருக்கு எழுதிய திருமடலின் ஐந்தாம் அதிகாரத்தைப் பின்பற்றி, இயேசு "புதிய ஆதாம்" என நிறுவினார் ஐரேனேயஸ். "ஒரு மனிதன் (ஆதாம்) வழியாய்ப் பாவம் இந்த உலகத்தில் நுழைந்தது. அந்தப் பாவத்தின் வழியாய்ச் சாவு வந்தது" (உரோ 5:12). "ஒருவரின் (இயேசு) கீழ்ப்படிதலால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள்" (உரோ 5:19). "இந்த ஆதாம் வரவிருக்கிறவருக்கு (இயேசு) முன்னடையாளமாய் இருக்கிறார்" (உரோ 5:14) என்று பவுல் தமது கிறிஸ்தியல் உண்மைகளைப் பதிவு செய்துள்ளார்.

இந்த இறையியல் செய்தியைப் பின்புலமாகக் கொண்டு, "தப்பறைகளுக்கு எதிராக" என்னும் தமது நூலில் ஏவாளுக்கும், மரியாவுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விவரிக்கிறார் புனித ஐரேனேயஸ். ஏவாளின் கீழ்ப்படியாமையால் பாவம் நுழைந்தது என்றும், மரியாவின் கீழ்ப்படிதலால் அவருக்கும், மனுக்குலத்திற்கும் மீட்பு கிடைத்தது என்றும் இன்று நாம் பேசுகின்ற மரியியல் செய்தியை முதன் முதலில் ஐரேனேயஸ்தான் எழுதினார்.

இந்தப் பின்னணியில் விவிலியத்தை நாம் ஆய்வு செய்கிறபோது, ஏவாள் மரியன்னையின் முதல் முன்னோடி என்பதற்கான ஆதாரங்களைக் காண்கிறோம்.

### 1. அனைவருக்கும் தாய்.

"மனிதன் தன் மனைவிக்கு 'ஏவாள்' என்று பெயரிட்டான். ஏனெனில் **உயிருள்ளோர் எல்லோருக்கும் அவளே தாய்**" (தொநூ 3:20) என்கிறது தொடக்க நூல். உயிரியல் அடிப்படையில் ஏவாள் நம் அனைவருக்கும் தாய் என்றால், மீட்பின் அடிப்படையில் மரியா அனைவருக்கும் தாய் என்பது உண்மை அல்லவா? "இயேசு சிலுவையில் தொங்கிய போது யோவானிடம் 'இவரே உம் **தாய்**' என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்" (யோவா 19:27). இயேசுவின் உயிர்ப்புக்குப்



பின்னர் "சீடர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர் களோடும், அவருடைய **தாய் மரியாவோடும்** இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்" (திப 1:14) என்னும் செய்தி இந்த உறவை உறுதிப் படுத்துகிறது.

**2. துணையும், ஆதரவும்.** முதல் ஆதாமுக்கு ஏவாள் துணையும் ஆதரவுமாய் இருந்தார் என்பதை "நீர் ஆதாமைப் படைத்தீர்; அவருடைய மனைவி ஏவாளை அவருக்குத் **துணையாகவும் ஆதரவாகவும்** உண்டாக்கினீர். அவர்கள் இருவரிடமிருந்தும் மனித இனம் தோன்றியது" (தோபி 8:6) என்னும் இறைமொழியிலிருந்து அறிகிறோம். இதன் தொடர்ச்சியாக, புதிய ஆதாமான இயேசுவின் மீட்புப் பணியில் மரியா துணையாகவும், ஆதரவாகவும் இருந்தார். அவர்கள் இருவரிடமிருந்தும் இறைமக்கள் என்னும் புதிய இனம் தோன்றியது.

**3. பாம்பால் வீழ்ச்சியும், பாம்பை வீழ்த்துதலும்.** மேற்சொன்ன இரண்டும் ஏவாளுக்கும், மரியாவுக்கும் உள்ள ஒற்றுமைகள். இருவருக்கும் உள்ள வேற்றுமையின் அடிப்படையிலும், ஏவாள் மரியாவின் முன்னோடியாக விளங்குகிறார். "**ஏவா பாம்பின் சூழ்ச்சியினால்** ஏமாற்றப் பட்டதைப்போல நீங்களும் உங்கள் எண்ணங்களைச் சீரழியவிட்டுக் கிறிஸ்துவிடம் விளங்கிய நேர்மையையும் தூய்மையையும் இழந்து விடுவீர்களோ என அஞ்சுகிறேன்" (2கொரி 11:3) என்னும் பவுலடியாரின் அச்சத்தில் ஏவாளின் தோல்வி நன்கு வெளிப்பட்டுள்ளது. மரியாவோ தமது கீழ்ப்படிதலால் பாம்பின்மீது வெற்றி கொண்டார்.

அன்னை மரியாவைப் புதிய ஏவாள் என்று அழைப்பது சில இறையியல் செய்திகளை நமக்குத் தருகிறது. முதலில், மரியா வழியாகவே மீட்பர் இயேசு பிறக்க வேண்டும் என்னும் கடவுளின் திட்டத்தை அது வெளிப்படுத்துகிறது. இரண்டாவதாக, மரியாவின் கீழ்ப்படிதலையும், இறை நம்பிக்கையையும் காட்டுகிறது. ஏவாளின் கீழ்ப்படியாமையின் காரணமாகத்தான் மீட்பரைப் பற்றிய வாக்குறுதி வழங்கப்பட்டது. ஏவாளின் கீழ்ப்படியாமைக்கு மருந்தாகத் தான் மரியாவின் "நான் ஆண்டவரின் அடிமை" என்னும் கீழ்ப்படிதல் வாக்கு தரப்பட்டது. ஆதாம் - ஏவாள் வழியாக வந்த மானிட வீழ்ச்சியைக் கடவுள் இயேசு - மரியாவின் கீழ்ப்படிதலால் மானிட எழுச்சியாக மாற்றினார். மீட்புத் திட்டத்தில் மரியா இயேசுவுக்கு நிகரானவர் அல்லர் என்றாலும், மரியாவின் பங்கும் மதிப்பு மிக்கது என்பதை இந்தப் பெயர் சுட்டிக்காட்டுகிறது.

பிரிந்த சகோதரர்களும், பெந்தகோஸ்தே சபையினரும் மரியா புதிய ஏவாள் என்னும் பெயரை ஏற்றுக்கொள்வதில்லை. இப்பெயருக்கு விவிலிய அடிப்படை இல்லை என்றும், இயேசுவின் முதன்மைத்துவத்தைக் குறைக்கிறது என்றும் அவர்கள் வாதிடுகிறார்கள். இருப்பினும், புனித ஜஸ்டின், புனித ஐரனேயஸ் காலத்தில் இருந்தே இறைவார்த்தையின் அடிப்படையிலேயே மரியா புதிய ஏவாள் என அழைக்கப்பட்டார் என்கிறது கத்தோலிக்கத் திருஅவையின் இறையியல் போதனை. மரியா புதிய ஏவாள் என்னும் சிந்தனை இயேசுவின் மீட்புப் பணியை எந்த விதத்திலும் குறைக்கவில்லை. அத்துடன், கடவுளின் மீட்புத் திட்டத்தில் தொடக்கத்தில் இருந்தே மரியாவுக்கு ஓர் இடம் இருந்தது என்பதையும் எடுத்துரைக்கிறது.



அருட்பணி. குமார்ராஜா

# தரிசனம் தருவாய் தாயே...

## மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர் 10



**உள்ளம் நிறைய மகிழ்ச்சியுடன் ஊருக்குச்** சென்று கொண்டிருந்தார், யுவான் டியேகோ. நடந்ததெல்லாம் கனவா? நனவா? என்று தன்னைத்தானே அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு பழங்குடி மனிதன், படிப்பறிவில்லாதவன், மனைவியை இழந்தவன், ஒரே துணையாக இருக்கும் மாமாவும் படுத்தபடுக்கையில், இப்படி சிலாகித்துச் சொல்லிக் கொள்ளுமாறு எதுவுமே இல்லாத ஒரு சாதாரண மனிதனாகிய தனக்குக் கிடைத்த மாபெரும் பேற்றினை நினைத்து நினைத்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார் அவர்.

அன்னையின் காட்சி, ஆயர் இல்லத்தில் தான் பட்ட அவமானங்கள், அன்னை தந்த அற்புத அடையாளம், அவமானப்படுத்தப் பட்ட அதே ஆயர் இல்லத்தில் சகல மரியாதைகளோடு உபசரிக்கப்பட்ட நிலை என எல்லாவற்றையும் மனக்கண்களில் ஓடவிட்டுக் கொண்டே நடந்தார்.

"எப்படியோ, அற்பனாகிய என்னை ஆண்டவரின் தாய் ஒரு முக்கியப் பணிக்கான கருவியாகத் தேர்ந்தெடுத்தார். எனக்கு என் தாய் தந்த பணியை முடித்துவிட்டேன்" என்ற நிறைவு மட்டும் அவருக்கு அதிகமாகவே இருந்தது. சிந்தித்துக் கொண்டே நடந்ததால் விரைவாகவே வீடு வந்து சேர்ந்துவிட்டார்.

வீட்டிற்கு வந்ததும் முதல் வேலையாகத் தன் மாமாவைப் பார்க்க வேண்டும். படுத்தபடுக்கையாக இருந்த அவர் இப்போது எப்படி இருப்பாரோ என்று எண்ணிக் கொண்டே உள்ளே நுழைந்த யுவானின் கண்கள் வியப்பால் விரிந்தன. நோய்வாய்ப்பட்டு இறப்பின் விளிம்பில் இருந்த அவர்தம் மாமா யுவான் பெர்னார்டினோ எந்தவிதக் குறையுமின்றி அமர்ந்திருந்தார். ஒரு வாரத்திற்குமுன் இவரது இறப்பை எண்ணிக் கவலைப்பட்டுத் தானே நோயில்பூசுதல் வழங்க அருள்தந்தையை அழைக்கச் சென்றேன், எப்படி நோயின் அறிகுறியே இல்லாமல் இவர் அமர்ந்திருக்கிறார்? என்ன நடந்தது? என்று விசாரிக்கத் தொடங்கினார்.

பெர்னார்டினோவின் வார்த்தைகள் யுவானை மீண்டும் வியப்பில் ஆழ்த்தின. தன் மாமாவின் இறுதி அருள்சாதனத்திற்காக அருள்தந்தையை அழைக்கச் சென்ற யுவான் டியேகோவைத் தடுத்தாட்கொண்டு தன் பணிக்காக அனுப்பிய அன்னை, யுவானின் பணியைத் தானே முன்னின்று செய்திருக்கிறார்.

ஆம், யுவான் ஆயரைச் சந்திப்பதற்காக மெக்சிகோ சென்றபோது அன்னை பெர்னார்டினோவைச் சந்திப்பதற்காக அவருடைய கிராமத்திற்கு வந்திருக்கிறார். படுக்கையில் கிடந்த பெர்னார்டினோவுக்கும் காட்சி தந்து அவரது நோயை முழுமையாகக் குணப்படுத்தியிருக்கிறார். தனக்குக்



காட்சிதந்து, தன் நோயைக் குணமாக்கிய அன்னையைப் பற்றி யுவான் பெர்னார்டினோ சொல்வதைக் கேட்கக் கேட்க யுவான் ஆனந்தத்தின் உச்சிக்கேச் சென்றுவிட்டார். நினைத்துப் பார்த்தார்: “மகனே, உன் மாமாவின் உடல்நலத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். அவரது நோய் முழுமையாகக் குணமாவது என் பொறுப்பு” என்று தன்னிடம் வாக்களித்த அன்னை அதை உடனடியாகச் செயல்படுத்தியிருக்கிறாரே என எண்ணி உள்ளம் மகிழ்ந்தார். இனி தன் வாழ்வே இந்த அன்னைக்கானது என்று முடிவெடுத்தார்.

அதேவேளையில் அன்னை காட்சி தந்த இடத்தில் அன்னையின் விருப்பப்படி கோயில் கட்டுவதற்கான பணிகள் முன்னெடுக்கப் பட்டன. முதற்கட்டமாக அங்கு ஒரு சிற்றாலயம் எழுப்பப்பட்டது. அன்னையின் திருவுருவம் அற்புதமாகப் பதிந்திருந்த யுவானின் தில்மா மேலாடை அங்கு வைக்கப்பட்டது.

இனி தன் வாழ்வு மாதாவுக்கானது என்று முடிவெடுத்த யுவான் அந்த சிற்றாலயத்தில் தங்குவதற்காக ஆயரிடம் சிறப்பு அனுமதி கேட்டார். யுவானின் வேண்டுகோளைக் கேட்ட ஆயர் சுமரேகா அமைதியாகச் சொன்னார்: “மகனே, யுவான், அன்னையின் அளப்பரிய ஆசீரைப் பெற்ற உங்களது வேண்டுகோளை என்னால் மறுக்க முடியுமா என்ன? அன்னையே உங்களைத் தேடி வந்த பிறகு அன்னையின் மடியில் நீங்கள் வசிப்பதுதான் சரி. தாராளமாகத் தங்குங்கள்”. ஆயரின் அனுமதி பெற்ற யுவான் குவாதலூப்பே காட்சி ஆலயத்திலேயே தங்கத் தொடங்கினார்.

வாரம் ஒருமுறை நற்கருணை பெறுவதே அபூர்வமாகப் பார்க்கப்பட்ட அந்தப் பதினாறாம் நூற்றாண்டில் வாரத்திற்கு மூன்று முறை யுவான் டியேகோ நற்கருணை பெற்றுக்கொள்ளவும் சிறப்பு அனுமதி தரப்பட்டது.

அன்னைக்காக தன்னையே அர்ப்பணித்த யுவான் தன் பழைய வாழ்வை முற்றிலும் கைவிட்டார். ஒரு துறவியைப் போல வாழத் தொடங்கினார். கிட்டத்தட்ட அன்னையின் ஆலயத்தில் அதனுடைய காப்பாளர் போலவே இருந்தார். செபம், தவம், மாதாவின் திருவுருவத்திற்குமுன் பல மணிநேரம் செலவிடல் என்றே யுவானின் வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது. குவாதலூப்பே காட்சி ஆலயம் திருப்பயணிகளால் நிரம்பி வழிந்தது. அன்னையைத் தேடி பல்லாயிரக்கணக்கான மக்கள் வரத் தொடங்கினர். வந்தவர்கள் யுவானைச் சந்தித்து, அவரது வாய்மொழியாகக் காட்சியைப் பற்றிக் கேட்கத் தொடங்கினர். கொஞ்சமும் சளைக்காமல் அன்னையைப் பற்றியும், அன்னையின் காட்சிகளைப் பற்றியும் அவர்களிடம் பேசிக்கொண்டே இருந்தார் யுவான்.

பதினேழு ஆண்டுகள் கழிந்தன. அது 1548ஆம் ஆண்டு. அன்னை முதன்முதலில் காட்சி தந்த அதே டிசம்பர் 9ஆம் நாள். அன்னை யுவானைத் தன்னோடு எடுத்துக் கொண்டார். ஆம், தனது 74ஆவது வயதில் அன்னையின் மடியில் அமைதியாக இளைப்பாறினார் யுவான் டியேகோ. அன்னை காட்சி தந்த அதே ஆலயத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

குவாதலூப்பே அன்னையின் மாட்சிக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த யுவான் டியேகோ 2002ஆம் ஆண்டு திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுலால் புனிதராக உயர்த்தப்பட்டார்.

அன்னையின் மற்றொரு முக்கியக் காட்சியுடன் அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.



**அருட்பணி.**
**க.செ. பிரவீன் ராசு**

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்



## நற்செய்திப் பணி

"தந்தை, கிறிஸ்துவை அர்ப்பணித்து உலகிற்கு அனுப்பினார் (காண் யோவா 10:36). கிறிஸ்து தம் திருத்தூதர்களின் வாயிலாக, அவர்களுக்குப்பின் ஆயர்களைத் தமது திருநிலைப்பாட்டாலும், தாம் ஆற்றவேண்டிய பணியிலும் பங்குகொள்ளச் செய்தார். ஆயர்கள் தம் பணிப்பொறுப்பைத் திருச்சபையில் தம் கீழ் உள்ள பல்வேறானவர்களுக்குப் பல்வேறு நிலைகளில் முறையாக அளித்திருக்கின்றனர். இவ்வாறு, கடவுளால் நிறுவப்பட்ட திருச்சபையின் பணியை முற்காலத்தில் இருந்தே ஆயர்கள், திருப்பணியாளர்கள், திருத்தொண்டர்கள் என அழைக்கப் பெறுபவர்கள் வேறுபட்ட நிலைகளில் நிறைவேற்றி வருகின்றனர்.

திருப்பணியாளர்கள், திருப்பணி நிலையின் உச்சநிலையைப் பெற்றிராதிருப்பினும், தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் ஆயரைச் சார்ந்திருப்பினும், திருப்பணிநிலை மேன்மையில் ஆயருடன் ஒன்றுபட்டிருக்கின்றனர்; மேலும், திருப்பணி நிலையென்னும் அருளடையாளத்தின் ஆற்றலால், நற்செய்தியைப் பறைசாற்றுவதற்கும் நம்பிக்கை கொண்டோருக்கு அருள்பணியாளராகப் பணிபுரிவதற்கும் திருவழிபாடு நிகழ்த்துவதற்கும் என்றும் வாழும் தலைமைத் திருப்பணியாளர் கிறிஸ்துவின் சாயலில் (காண் எபி 5:1-10; 7:24; 9:11-28) புதிய ஏற்பாட்டின் உண்மையான திருப்பணியாளர்களாகத் திருநிலைப்படுத்தப் பெற்றுள்ளனர். தங்களது பணியின் நிலைக்கு ஏற்ப ஒரே இணைப்பாளரான கிறிஸ்துவின் (1திமொ 2:5) அலுவலில் பங்குபெற்று, எல்லாருக்கும் கடவுளின் வார்த்தையை அறிவிக்கின்றனர்; நற்கருணை வழிபாட்டில் அதாவது திருப்பந்தியில் மிகச் சிறந்த முறையில் தங்களது திருப்பணியை ஆற்றுகின்றனர்.

உளம் வருந்தும் நம்பிக்கை கொண்டோரைக் கடவுளோடு மீண்டும் ஒப்புரவாக்கவும், நோயுற்றிருக்கும் நம்பிக்கை கொண்டோரின் நோயைத் தணிப்பதற்குமான பணியைச் சிறப்பாக நிறைவேற்றுகின்றனர்.



நம்பிக்கை கொண்டோரின் தேவைகளையும் வேண்டல்களையும் இறைத் தந்தையின் முன் கொணர்கின்றனர் (காண் எபி 5:1-4). தங்கள் அதிகாரத்தின் எல்லைக்குள் நின்று அருள்பணியாளரும் தலைவருமான கிறிஸ்துவின் பணியை நிறைவேற்றி, கடவுளின் குடும்பத்தை ஒருமனப்பட்ட சகோதரக் குழுவாக ஒன்று கூட்டுகின்றனர். தூய ஆவியால் இறைத் தந்தையிடம் கிறிஸ்துவின் வழியாக அதை இட்டுச் செல்கின்றனர். மக்கள் குழுவின் நடுவில் நின்று, கடவுளை அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் வழிபடுவர் (காண் யோவா 4:24). இறுதியாக, ஆண்டவரின் சட்டத்தில் தாங்கள் தியானித்து வாசிப்பதை நம்பி, நம்புவதைப் போதித்து, போதிப்பதை வாழ்வில் கடைப்பிடித்து, கற்பிப்பதிலும் இறைவார்த்தையை அறிவிப்பதிலும் ஈடுபட்டு உழைக்கின்றனர் (காண் 1 திமொ 5:17).

அரசியல், பொருளாதார, சமூக ஒன்றிப்பை நோக்கி மனிதகுலம் மேன்மேலும் விரைந்துகொண்டிருக்கும் இக்காலத்தில், கடவுளது குடும்பத்தில் மனிதகுலம் முழுவதும் ஒன்றிணையும்படியாக ஆயர்களதும் உரோமை ஆயரதும் தலைமையின்கீழ் இணைந்து அக்கறை காட்டி உழைத்து; பிளவுக்கு வழிவகுக்கக் கூடிய யாவற்றையும் திருப்பணியாளர்கள் அழித்தொழிப்பார்களாக" - திருச்சபை எண் : 28

**நற்செய்திப்பணி**

"நற்செய்தியைப் பறைசாற்றவும் கிறிஸ்துவை இன்னும் நம்பாத நாடுகள், குழுக்கள் நடுவே திருச்சபையை நிறுவவும், அனைத்துலகிற்கும் திருச்சபையால் அனுப்பப்பட்ட நற்செய்தித் தூதர்களின் தனிப்பட்ட முயற்சிகள் "நற்செய்திப்பணி" எனப் பொதுவழக்கில் அழைக்கப்படுகின்றன. ..........திருச்சபை இன்னும் வேரூன்றா நாடுகள் அல்லது குழுக்கள் நடுவே அதை நிறுவுவதும், நற்செய்தியைப் பறைசாற்றுவதும் இந்த நற்செய்திப் பணிக்குரிய குறிக்கோள் ஆகும். - திருச்சபையின் நற்செய்திப்பணி # 6

"ஆண்டவர் இயேசு தொடக்கத்திலிருந்தே 'தாம் விரும்பியவர்களைத் தம்மிடம் வரவழைத்தார்... தம்மோடு இருக்கவும் நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும்... அவர் பன்னிருவரை நியமித்தார்" (மாற் 3:13-15). இவ்வாறு, திருத்தூதர்கள் புதிய இஸ்ரயேலின் வித்துக்களாகவும், அதே சமயத்தில் திருச்சபை ஆட்சி அமைப்பின் தொடக்கமாகவும் இருந்தனர். பின்னர், தம் இறப்பாலும் உயிர்த்தெழுதலாலும் நமக்கு நிறைவாழ்வளித்து, எல்லாவற்றையும் புதுப்பிக்கும் மறைத்திட்டத்தை ஒரேமுறை தம்மில் நிறைவேற்றிய ஆண்டவர் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் கொண்டவராய், தாம் விண்ணேற்றம் அடைவதற்குமுன் திருச்சபையை நிறைவாழ்வின் அருளடையாளமாக நிறுவினார். தந்தையால் தாம் அனுப்பப்பட்டது போலவே அவரும் திருத்தூதர்களை உலகம் முழுவதற்கும் அனுப்பினார்." -திருச்சபையின் நற்செய்திப் பணி # 5

தொகுத்தளிப்பவர் : **கலாபன் வாஸ்**

## வரவேற்கிறோம்



### திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 14. | சாஞ்சோதுவான் | ஜான் ஜெர்விஸ் - வினோன்ஸியா | 14.06.2026 | பொம்பெயி மாதா |
| 15. | இன்ஃபன்ட் ஜேன்விகா | சேசுபிரசாத் - ஆக்னிதா | 21.06.2026 | தஸ்நேவிஸ் மாதா |

# நற்செய்திப் பணியில் இறையாட்சியின் மகிழ்ச்சி



இறையரசு என்பது அனைத்து இறைச் சமூகங்களும் மகிழ்ச்சியால் இன்புற்றிருப்பது என்ற நிலைப்பாடு. இறையாட்சி என்று அழைக்கலாம். மனிதகுலம் இறையாட்சி நிறைவை நோக்கிச் செல்கிறது என்பதை, இன்பக் கனவொன்று நான் கண்டேன்; இறையாட்சி மலரக் கண்டேன்; மனங்கள் இணையக் கண்டேன் என்ற கிறித்தவப் பாடலைக் கேட்கின்றோம்.

இறையாட்சி நம்முடைய மனித வாழ்வின் முழுமை என்றார் இயேசு. அவருடைய செயல்கள் அனைத்தும் நம்மை வெற்றிப் பாதையில் வழிநடத்துகிறது. அதுமட்டும் அல்ல அவருடைய போதனைகள், உவமைகள் ஏன் அவருடைய செயல்கள் அனைத்தும் இறையாட்சியை நோக்கியதாகவே இருந்தது. இறையாட்சி நம் மத்தியில் இயேசுவால் மலர்ந்திருக்கின்றது. அது நிறைவை நோக்கி பயணிக்கின்றது.

இஸ்ராயேல் மக்களில் பலர் இறைவனின் ஆட்சியை எதிர்பார்த்து காத்திருந்தனர். அவர்கள் நடுவே தோன்றி அவர்களைத் தோழர்களாக நண்பர்களாகத் தேர்ந்தெடுத்த இயேசு நிறைவுகால மகிழ்ச்சியை அவர்களுக்கு வழங்குகிறார். இறையாட்சி உங்கள் நடுவேதான் உள்ளது என்று முதலில் ஓர் இன்ப அதிர்ச்சியை அந்த மக்களிடம் ஏற்படுத்துகின்றார்.

தந்தையே! விண்ணரசின் மறை பொருளை ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் மறைத்து குழந்தைகளுக்கு வெளிப் படுத்தியதால் உம்மைப் புகழ்கிறேன் என்று ஆவியாரின் ஆற்றலால் அக்களித்தார் இயேசு. சிறுவர்களை வரவிடுங்கள் இறையரசு அவர்களுக்குரியது என்று கூறினார். இயேசுவின் மகிழ்ச்சி என்பது எந்த மனநிலைப் படைத்ததாக இருக்கிறது ஏனென்றால் கடவுளின் அன்பு ஏழைகளின் மீது அதிகமான பாசமும் அரவணைப்பும் கலந்த ஒன்றாக இருக்கிறது. நம் ஆண்டவரின் பாசக்கரமானது ஏழையின் மேல் அதிகமாக உள்ளது. இறைமகன் இயேசு தன்னுடைய



பணியில் மிகுந்த மகிழ்ச்சியை ஏழைகளிடம் வெளிப்படுத்ினார்.

இயேசுவின் வார்த்தைகளைக் கேட்ட சமாரியப்பெண் துள்ளிக் குதித்து தன்னுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். நிக்கோதேமு தாம் பிறந்த நிலையைக் கண்டு அகமகிழ்ந்து இருட்டில் வாழ்ந்தவர் பகலை தன்னுடைய வாழ்வாக பெற்றுச் சென்றார். மகதலேன் மனமாற்றம் பெற்று மகிழ்ச்சியில் விலையுயர்ந்த தைலத்தை இயேசுவின் பாதத்தில் ஊற்றி பணிவிடை புரிந்தார். நோய்களில் குணம் பெற்றவர்கள் துள்ளிக் குதித்து மகிழ்ச்சியால் இறைவனைப் போற்றி ஆர்ப்பரித்தனர். இத்தகைய மகிழ்ச்சியை நாம் விவிலியத்தில் காண்கிறோம்.

இறைமகன் இயேசு நமக்கு நிகழ் காலத்தை மாபெரும் கொடையாகக் கொடுத்தார். அதை நாம் நிறைவுகால மகிழ்ச்சியாகப் பெற்றோம். இத்தகைய மகிழ்ச்சியை இயேசுவின் சீடர்கள் பெற்று மகிழ்ந்தனர். பவுல் சென்ற இடமெல்லாம் எதிர்ப்பும் வேதனையும் அவரை ஆட்கொண்டது. ஆனால் இறைவனிடம் பெற்ற மகிழ்ச்சி அவரை பணிபுரியச் செய்தது.

இறைமகன் இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றச் சென்ற சீடர்கள் பல இடங்களில் இரத்த சாட்சியாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இயேசுவிடம் பெற்ற மகிழ்ச்சி அவர்களை நற்செய்திப் பணி செய்ய மிகவும் உதவியது. சீடர்கள் மனநிறைவோடு இயேசுவுக்காக தங்கள் வாழ்க்கையைக் கையளித்தனர்.

இந்த நிறைவுக்கால மகிழ்ச்சி இறையாட்சி சமூகத்தை விரைவுப்படுத்தியது. இறையரசு இந்த மண்ணில் முழுமையாக உருவாகும் என்ற நம்பிக்கையைத் தருகின்றது. இறையாட்சியின் துவக்கத்தை இந்த மண்ணில் காண உதவுகிறது.

“அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்;
அதை அங்கொரு காட்டிலோர்
பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு;
தழல் வீரத்திற் குஞ்சென்று
மூப்பொன்று முண்டோ?”

என்று பாரதி பாடுவதைப் போன்று இறையரசு கடுகு விதையாக, புளிப்பு மாவாக இந்த உலகில் இருக்கிறது. வளர்ந்து வரும் இறையாட்சி என்றும் நிலைத்துநிற்கும் என்ற நிலைப்பாடு அனைத்து மக்களின் மனதிலும் இருக்கிறது.

இறையாட்சி ஒரு நாள் முழுமை பெறும் என்ற நம்பிக்கையும், அன்பு, மகிழ்ச்சியும் அதற்கான செயல்பாட்டில் நிறைவு காணும் எந்த மனிதனும் இந்த சமுதாயத்தின் முழுமையை நோக்கிச் செல்பவன்தான். இந்தப் பயணத்தில் இயேசுவின் இறையாட்சி என்ற தாரக மந்திரம் புதுமைகள் பல செய்கிறது; வலிமைகள் பல காட்டுகிறது; செருக்குற்றோரைச் சிதறடிகிறது; எளியவரை உயர்த்துகிறது; எல்லையில்லா இன்பத்தை நோக்கி நம்பிக்கை யாளர்களை நடத்துகிறது.



**அருட்சகோதரர் மைக்சன்**

## வாழ்த்துகின்றோம்

### புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 15. | கிரேஸ்லின் | பிளைவின் - ஆனந்தி வாஸ் | 27.06.2026 | சூசையப்பர் |

# நற்செய்திப் பணி

நற்செய்தி என்பது மீட்பின் செய்தி. இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு ஆகியவை மீட்பையும் நற்செய்தியாகவும் உலக மக்கள் அனைவருக்கும் உரியதாக மாற்றின (உரோ1;3-4). இறையாட்சியை இந்த உலகில் நிலைநாட்டுதலே நற்செய்தி அறிவிப்பின் நோக்கம். நலமான மனித உறவுகள் வளர்வதற்கு உழைப்பதும், நல்ல சமுதாயத்தை உருவாக்குவதும் நற்செய்தி அறிவிப்பாளரின் கடமை.



[புனித தோமா]

திருத்தந்தை பிரான்சிஸ் 24.11.2013 அன்று எழுதி வெளியிட்ட "நற்செய்தியின் மகிழ்ச்சி" (The Joy Of Gaspel) என்ற ஆவணத்தில் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு, ஏழ்மையின் எடுத்துக்காட்டுடன் இயேசுவின் அன்பில் நம்பிக்கைக் கொண்டு நற்செய்தியை அறிவிக்க அழைப்பு விடுக்கிறார். இயேசுவின் உயிர்ப்புக்குப்பின் அன்னை மரியா இயேசுவின் திருத்தூதர்களோடும் மற்ற சீடர்களோடும் ஓரிடத்தில் கூடி செபித்தபோது, அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டபோது, அவர்கள் உள்ளத்தில் "உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பரப்ப வேண்டும்" என்ற ஒரே நோக்கத்தோடு, நற்செய்திப்பணியில் மறைச்சாட்சிகளாக தங்களையே அர்ப்பணித்தவர்கள் பலர். "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ கேடு" என்கிறார் புனித பவுலடியார்.

தூய ஆவியின் தூண்டுதலுக்கு செவி சாய்த்து அச்சமின்றி மீட்பு செயல்களில் இறங்குபவர்களே நற்செய்திப் பணியாளர்கள். இவர்கள் தன்னலம் துறந்து, பிறர் நலம் நாடி, மக்களை அணுகி, பல எதிர்ப்புகள் மத்தியிலும் துணிச்சலோடு இயேசுவின் நற்செய்தியை அறிவிப்பவர்களே இப்பணியாளர்கள். செபமும், பணியும் இவர்களின் இரு கண்கள். வாழ்வின் பொருளையும், மகிழ்ச்சியையும் தங்கள் அருள் பணியில் அவர்கள் கண்டடைகின்றனர். தங்கள் பேச்சிலும், மூச்சிலும் ஒன்றித்து, தங்கள் அனுபவங்களைப் பிறரோடு பகிர்ந்து கொள்கின்றனர். மக்களின் ஞான வளர்ச்சிக்கு தம் உயிரையே தியாகம் செய்யும் அர்ப்பண உள்ளத்துடன் செயலாற்றுகின்றனர். பெண்களும், இளைஞர்களும் பெரும்பான்மையாக நற்செய்திப் பணிக்குழுவில் பங்கு கொள்ள வேண்டும்.

"மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து முளை அரும்பி வளரச்செய்து, விதைப்பவனுக்கு விதையையும்



"உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் அங்குத் திரும்பிச் செல்வதில்லை" (எசாயா 55:10) அதுபோல நற்செய்தியாளரால் விதைக்கப்பட்ட இறைவார்த்தையோடு கூடிய நற்செய்தி நல்ல பலன் அளிக்கும் என்ற நம்பிக்கையுடன் சோம்பலின்றி சுறுசுறுப்பாகச் செயலாற்ற வேண்டும். தனது வாழ்விலும் தான் அறிவிப்பதை பிரதிபலிக்க வேண்டும்.

தனக்கு எல்லாம் தெரியும் என்ற இறுமாப்புடன் தன்னிச்சையாக செயலாற்றாமல், திரு அவை வழங்கியுள்ள போதனைகள், சட்டதிட்டங்கள் ஆகியவற்றை அவர்கள் அறிந்து செயல்பட வேண்டும். கிறிஸ்தவ மக்கள், நற்செய்தி பணியாளர்கள், துறவிகள் ஆகியோரிடையே போட்டி, பொறாமை, பிளவு ஏற்படாமல் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். மக்களுக்கு நற்செய்தி அறிவிப்பதோடு அவர்களின் வறுமை உள்ளிட்ட அனைத்து இன்னல்களையும் தீர்ப்பவராக இருக்க வேண்டும். இறையாட்சியை மண்ணில் மலரச் செய்பவர் கடவுளே.

திருத்தூதரின் அரசியாகிய கன்னி மரியாவின் வேண்டுதல் வழியாக மக்களினங்கள் உண்மையை விரைவில் அறிந்துணர வேண்டும். இயேசுவின் சீடர்களுள் ஒருவரான திதிம் என்ற தோமா இந்தியாவின் பாதுகாவலர். இவர் கலிலேயாவைச் சேர்ந்தவர். இவர் துணிவுள்ள மனிதர். இயேசு உயிர்த்து விட்டார் என்று மற்ற சீடர்கள், "நாங்கள் ஆண்டவரை கண்டோம்" என்று கூறியபோதும் இயேசுவின் ஆணிகள் அறைந்த இடத்தில் என் விரலை விட்டு, என் கைகளை அவர் விலாவில் இட்டாலொழிய நம்ப மாட்டேன் என்று நம்ப மறுத்தவர். எட்டு நாட்களுக்கு பின்னர் கதவுகள் மூடியிருக்க, இயேசு தோமாவிடம், "இங்கே உன் விரலை இடு" என்று கூறினார். தோமா, "என் ஆண்டவரே, என் தேவனே" என்றார். இயேசு தோமாவிடம், "நீ என்னை கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறு பெற்றோர்" (யோவ.20;29) என்றார்.

இவர் பல நாடுகளிலும் நற்செய்திப்பணியை ஆற்றியதோடு தென்னிந்தியாவில் சென்னையிலுள்ள சின்னமலை, பெரியமலை, சாந்தோம் பகுதியில் போதித்து பலரை கிறித்தவத்தை தழுவச் செய்தார். இதனால் கோபம் கொண்ட அந்தணர்கள் கல்லால் எறிந்து, நீண்ட ஈட்டியால் குத்திக் கொன்றனர்.

ஆழமான கிறித்தவ விசுவாசத்தை நம்மிடையே கொண்டு வந்த தோமாவின் திருவிழா ஜூலை 3ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. இத்தகைய நற்செய்திப் பணியை செய்ய நாமும் முன் வருவோம்!

.



**ரோஸ் சேவியர்**

## ஆசி கூறுகின்றோம்



### திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 14. | செபஸ்டின் சிபின் வில்லவராயன் - பெர்ட்டினா | அன்னை வேளாங்கன்னி | 18.06.2026 |
| 15. | மரிய ஆண்டனி ரோஷன் மிசியர் - ஜோனா ஹனனி | திருச்சிலுவை | 25.06.2026 |

# விடிவெள்ளியின் விழா



நிறைய நேரம் பனிமய அன்னையின் மீதான மக்களின் பக்தி மெய் சிலிர்க்க வைப்பதாக பலரும் சொல்ல கேட்டிருக்கிறோம். உணர்ந்திருக்கிறோம்.

தூத்துக்குடி கடற்கரை சாலை - ஜூலை மாதம் வந்துவிட்டாலே களைகட்டும். ஜூலை மாத இறுதியில் நிகழும் பார்போற்றும் பனிமய அன்னை பெருவிழாவுக்காக சாதி மத பேதம் களைந்து ஒட்டு மொத்த மாநகரும் தயாராகும். இந்த ஆண்டும் அந்த தயாரிப்பின் ஒரு பகுதியாய் நமது அன்னையை விடியற்காலையின் நட்சத்திரத்தை புகழவே இந்த கட்டுரை...

'விடியற்காலத்தின் நட்சத்திரம்' அல்லது 'விடிவெள்ளி' என்பது அதிகாலையில் வானில் தோன்றும் 'வெள்ளி' கோளைக் குறிக்கின்றது. கிழக்குத் திசையில் காட்சியளிக்கும் இந்தக் கோள், சூரிய உதயத்தை முன்னறிவிப்பதாக உள்ளது. தொழில்நுட்பம் வளர்ச்சியடையும் முன்பு கடல் பயணம் மேற்கொண்டவர்கள் விடிவெள்ளியைக் கொண்டே திசையை அறிந்ததால், இது 'கடலின் விண்மீன்' என்றும் அழைக்கப்படுகிறது.

அன்னை மரியாவை 'விடிவெள்ளி' என்று அழைப்பது, கடவுளால் வழங்கப்பட்ட காரணப் பெயராகவும் விளங்குகிறது. ஏனெனில் இயேசு என்ற ஆதவனின் வருகையை முன்னறிவிக்கும் விடிவெள்ளியாகவே உலக வரலாற்றில் மரியா தோன்றினார். சூரியனின் கதிர்களால் பிரகாசிக்கும் விடிவெள்ளியைப் போன்று, நமது அன்னை மரியாவும் இயேசுவின் நம்பிக்கை ஒளியால் பிரகாசிக்கிறார். கதிரவனின் பண்பு நலன்களை விடிவெள்ளி பிரதிபலிப்பது போல இயேசுவின் மாட்சியைப் பிரதிபலிப்பவராக அன்னை மரியா திகழ்கிறார். 'இதனால் தான் திருச்சபையின் உயரிய, சிறப்புப்பெற்ற, முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த உறுப்பாகவும், நம்பிக்கை மற்றும் அன்பின் முன்குறியாகவும் அன்னை மரியா போற்றப் பெறுகின்றார்.

கீழ்த்திசை அடிவானத்தில் தோன்றும் விடிவெள்ளி, கடல் பயணத்தை நம்பிக்கையுடன் தொடர வழி செய்கிறது. நீண்ட நெடிய கடல் பயணத்தில் நம்பிக்கைச் சுடராக விடிவெள்ளி திகழ்கிறது. அவ்வாறே, மரியாவும் மனிதகுலத்தின் நெடும்பயணத்தில் நம்பிக்கை தரும் விடிவெள்ளியாக ஒளி வீசுகிறார். முதிர்ந்த வயதில் கருவுற்ற எலிசபெத்துக்கும், கானா ஊர் திருமண வீட்டினருக்கும் தேவையறிந்து உதவி செய்ததன் மூலம் மரியா நம்பிக்கையின் நட்சத்திரமாகத் திகழ்ந்தார். புதிய ஏவாளாய் மனுக்குலத்திற்கு நம்பிக்கை தந்தவர் அன்னை மரியா.



படைப்பின் தொடக்கத்தில் இறைவனால் உருவாக்கப்பட்ட ஏவாள் கடவுளைப்போல ஆக வேண்டும் என்ற ஆசையால் விலக்கப்பட்ட கனியை உண்டு மோட்சத்தை இழந்தார். கடவுள் கொடுத்த ஆசீரையும் இன்பங்களையும் புறந்தள்ளிவிட்டு சொந்த ஆசையையும், உலக இன்பங்களையும் தேடினார். மனுக்குலத்திற்கு பாவ சுமை தந்தார். கீழ்ப்படியாமையால் அழிவின் தொடக்கமானார். உயிர் வாழ்வோர் அனைவருக்கும் தாயான தகுதியை பேராசையால், அகங்காரத்தால் இழந்தார். தன்னோடு ஆதாமையும் பாவம் செய்ய வைத்தார்.

ஆனால் அன்னை மரியா கடவுளுக்கு அடிமையாகி தன்னுடைய அளவற்ற தாழ்ச்சியால் இழந்த மோட்சத்தை மீண்டும் நமக்கு பெற்றுத்தந்தார். பாவத்தை அழிக்க மோட்சத்திலிருந்து இயேசு என்ற தெய்வீகக் கனியை உலகிற்குக் கொண்டு வந்தார். கடவுளின் ஆசையை தன் சொந்த ஆசையாகக் கொண்டு உலக இன்பங்களை புறந்தள்ளிவிட்டு, துன்பங்களை ஏற்றுக் கொண்டு கடவுள் கொடுத்த ஆசீரையும், அவர் கொடுத்த வாழ்வையும் மட்டுமே நாடினார். தன்னுடைய அமல உற்பவம் கெடாமல் உலகிற்கு மீட்பரைக் கொண்டுவந்து தன்னையும், உலகினர் அனைவரையும் கடவுளோடு இணைத்தார். உயிர் வாழ்வோர் அனைவருக்கும் தாயான தகுதியை தன்னுடைய அளவற்ற தாழ்ச்சியாலும், கீழ்ப்படிதலாலும், பரிசுத்தத்தாலும், கன்னிமை குன்றா கற்பாலும், மாசற்ற இருதயத்தாலும் பெற்றார்கள்.

எனவேதான் 'தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவள் என்பர்' (லூக்கா 1:48) என்று அன்னையே தனது நன்றிப் பாடலில் கூறுகின்றார். 'ஏவாளின் வழிமரபினர் நடுவினின்று, கன்னி மரியாவைத் தம் மகனின் தாயாகுமாறு கடவுள் தேர்ந்து கொண்டார். அருள் நிறைந்தவரான மரியா, மீட்பின் தலைசிறந்த கனியாக விளங்குகிறார்.'

அப்படிப்பட்ட அன்னையைக் கொண்டாடத் தயாராகும் நாம் புது உடை, கொண்டாட்ட மனநிலை ஆகியவற்றோடு நில்லாமல் முழு மனப்பற்றுதலோடு நமது பாவ வாழ்க்கையை விட்டு மனம் திருந்தி அன்னையின் வழியாக இறைவனிடம் திரும்பி வருவோம் . அதுதான் உண்மையான திருவிழா தயாரிப்பாக இருக்கக் கூடும். இயேசு சொன்னபடி, வழி ஓரத்திலே விழுந்த விதைகளை எவ்வாறு பறவைகள் வந்து கொத்தி சென்று விட்டதோ, அதேபோல சிலர் இறைவார்த்தையைக் கேட்பார்கள். ஆனால், அதை வெறுப்பார்கள், அதற்கு கீழ்ப்படிய மாட்டார்கள். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு நற்செய்தி நூல்களில் நாம் பார்க்கின்ற பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள். நாமும் பல நேரங்களில் அவர்களைப் போல் வழியோர விதைகளாகவே வாழ்வு முழுவதும் பயணப்படுகிறோம். அதைவிட்டு மனம் திருந்திய மக்களாய் பனிமய அன்னையின் பெருவிழாவைக் கொண்டாடுவோம்.

பனிமயம் வாசகர்கள் அனைவருக்கும் பார் போற்றும் பனிமய அன்னையின் பெருவிழா நல்வாழ்த்துகள்.



**முனைவர். சி. ஜாக்சன்**

**அடுத்த மாத இதழ்,**
**"பனிமயத் தாய்"**
**எனும் தலைப்பில்**
**பெருவிழா**
**சிறப்பிதழாக வெளிவருகின்றது.**
**படைப்புகள்**
**வரவேற்கப்படுகின்றன.**



# விவிலியப் போட்டி 135

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**மாற்கு நற்செய்தி அதிகாரம் 11 முதல் 16 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**ஓரிரு வார்த்தைகளில் விடையளி :**

1. முதலில் இயேசு யாருக்குத் தோன்றினார்?
2. இயேசுவைக் கண்டு வியப்புற்ற மனிதன் யார்?
3. ஒலிவ மலைக்கு அருகிலுள்ள ஊர்கள் எது?
4. யாரைக் குறித்து கவனமாக இருக்க வேண்டும்?
5. கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று. - அதிகாரம், வசனம்?
6. நறுமணத் தைலம், படிகச் சிமிழுடன் யாருடைய வீட்டிற்கு அந்தப் பெண் வந்தாள்?
7. இயேசுவின் உடலைக் கேட்டவர் யார்?
8. எப்படி இயேசுவைக் காட்டிக்கொடுக்கலாம் என்று வாய்ப்பு தேடிக் கொண்டிருந்தவன் யார்?
9. உண்மையாகவே இறைமகன் என்றவர் யார்?
10. இனி உன் கனியை யாரும் உண்ணக்கூடாது என்று எதைப்பார்த்து கூறினார்?

## விவிலியப் போட்டி 134

**ஜுன் 2026** — *விடைக் குறிப்புகள்*

**மாற்கு நற்செய்தி அதிகாரம் 6 முதல் 10 வரை**

| | |
|---|---|
| 1. செல்வர் | 10:23 |
| 2. அதிகாரம் : 10, வசனம் : 9 | |
| 3. பேதுருவையும் யாக்கோபையும் | 9:2 |
| 4. எண்ணெய் | 6:13 |
| 5. திறக்கப்படு | 7:34 |
| 6. கைத்தடி தவிர | 6:9 |
| 7. ஐயாயிரம் | 6:44 |
| 8. உப்பால் | 9:49 |
| 9. பார்வையற்றவர் | 8:24 |
| 10. பரிசேயர், ஏரோதியர் | 8:15 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் :**

**10.07.2026**

இந்த தேதிக்குள் வந்துசேரும் விடைத்தாள்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும்.

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**95974 81624** (வாட்ஸ் அப் மட்டும்) அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*



**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 201**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 111**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 5**

| | | |
|---|---|---|
| 1. | சிறுமலர்அன்பியம் | எல்சிட்டா ஆனந்தன் |
| 2. | அந்தோணியார் அன்பியம் | ஜெயா |
| 3. | அன்னை தெரசா அன்பியம் | ஜூலியட்ஸ் ரூபி |
| 4. | அன்னை வேளாங்கன்னி அன்பியம் | ப்ரவீனா ரவிக்குமார் |
| 5. | கிறிஸ்தரசர் அன்பியம் | ஜாய் ரோச் |

## பாராட்டுக்குரியவர்கள் : 106

**அந்தோனியார் அன்பியம்**
6. பிருந்தா
7. ரீனா மொறாயிஸ்
8. ஜெசி
9. சரோஜா மஸ்கரனாஸ்

**அன்னை தெரசா**
10. ரெய்ஸா சுஜய்

**அன்னை வேளாங்கன்னி**
11. டென்சி
12. நான்சி
13. அலைனா சந்தலேனா

**கிறிஸ்தரசர்**
14. ரெக்ஸ் கிரீன்வெல்
15. லூரட் வசந்த்
16. ஜீலியட் சாவியோ
17. செலஸ்கி கிளமென்ட்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
18. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி

**திவ்ய பாலன் அன்பியம்**
19. ஸ்டார்லக் ஏஞ்சலின்
20. சென்சிலா சகாயராஜ்
21. பிரின்சி
22. சகாயராணி தனராஜ்

**பாத்திமா மாதா**
23. பிச்சம்மாள்
24. அனு ஆல்வின்
25. ரீனா ராஜா
26. ஜெனிட்டா மைக்கல்
27. ஸ்டெபி ரீகன்
28. மேரி ஹம்லின்

**இரக்கத்தின் மாதா**
29. சேவியர் அம்மாள் கோமஸ்
30. பிரைட்டன் ஜெரோபின்
31. சித்ரா மோத்தா
32. பாப்டிஸ்டா
33. செல்விபுரோ
34. இருதயம்மாள் கொன்சால்
35. சகாயராணி

**ஜெபமாலை மாதா**
36. கல்யாணி செல்வராஜ்
37. சேவியர் ஏஞ்சல்
38. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**
39. டெரன்சியா அரிஸ்டோ
40. கிறிஸ்டோ ஜெபினா

**காவல் தூதர்**
41. ஜூலியஸ் தல்மேதா
42. அல்பின்
43. ரஸ்கின் வசந்தா
44. செல்வ ராணி
45. சாந்திஆல்ட்ரின்
46. வெனிட்டாள்
47. பிரிசில்லா
48. ஜோ ட்ரினிஷா
49. எலிஜா இம்மானுவேல்

**குழந்தை தெரசா**
50. பெர்லி டென்சன்
51. பெனி முறாய்ஸ்
52. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
53. மோனிகா செபஸ்டின்
54. எமல்டா
55. சுகிர்தா
56. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
57. ரொசாரி கோமஸ்
58. வெர்ஜினியா
59. லீமாரோஸ் ஜாய்
60. சகாயராஜா சகாயராணி

**லூர்து மாதா**
61. ஜெனோ சேவியர்
62. பிலோ கோமஸ்
63. ரஜூலா ஜான்போஸ்கோ
64. சாண்டினா
65. லூர்து லினட்
66. ஆலிவர் வி. ராயர்

**மிக்கேல் அதிதூதர்**
67. ஜோஸ்பின் பர்னாந்து
68. வினோ அந்தோணி

**பனிமய அன்பியம்**
69. சுரேஷ் ஆனி
70. ராணி
71. ஜூடுரதி
72. அந்தோணிசாமி
73. மெர்ஸி
74. ஜாக்குலின் வினோதினி

**பவுலடியார்**
75. ராஜா ரோஸ்லின்
76. ஒபிலியா தாமஸ்

**பரிபூரண மாதா**
77. சப்னாகினிஸ்டன்
78. மெடோனா

**பொம்பெய் மாதா**
79. தெரசா பிரகாஷ்
80. டிரைபேனா
81. மேத்யூ கர்டோசா
82. சித்ராஅலாய்
83. லூடா கான்ஸ்டன்
84. அல்சி கர்டோசா
85. ஜான்சிராணி அமல்ராஜ்
86. ஃபெலிக்ஸ் சோபியா
87. இம்மாக்குலெட் சதிஷ்

**இராயப்பர்**
88. டெய்ஸி
89. நேவிஸ் அம்மாள்
90. போஸ்கோ ரெனோ
91. ரொமில்டா வெனான்சியுஸ்

**சவேரியார்**
92. டெலிலாஅமலன்
93. அனுஷியாபீட்டர்
94 ஜோர்னல் ஜென்ஸி
95 ஜாஸ்மிலின் அல்டோசாலோமன்

**செபஸ்தியார்**
96. அந்தோனியம்மாள் டென்சிங்
97. பிரவீனா
98. ஜெஸிலாசேவியர்

**சிந்தாயாத்திரை மாதா**
99. டோனஸ் ராயன்
100. லாசர் செல்வி
101. நேசம்
102. ஜூடி ஆரோக்கியராஜ்

**சிறுமலர் அன்பியம்**
103. விஜிலியா
104. தாயம்மாள்
105. விஜி சகாயராஜ்

**சூசையப்பர்**
106. மென்சி
107. கிறிஸ் ரீஜோ

**திருச்சிலுவை**
108. ஜஸ்டின் ஸ்நோகுளோரி
109. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
110. ஜெரிஷா
111. ஸ்டீவ் சான்ஜோ

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 90

**பரிசு பெறுபவர்கள் : 3**

112. சென்னை — **ஆண்டனிகா ஷெர்லி**
113. யூதா ததேயு கோவில் — **ஜூடி ரீத்தம்மாள் மேரி**
114. அந்தோனியார் கோவில் — **மென்சிலா லொயோலா**

## பாராட்டுக்குரியவர்கள் : 87

**சென்னை**
115. ரெஜினா கிரகோரி
116. மேமா ஸ்டீபன்
117. பிரேமா குணசீலன்
118. கமலஜோதி ஜெயசீலன்
119. டெனிசா கிளாட்

**கொடைக்கானல்**
120. ஜெஸிந்தா மார்ட்டின்

**திருச்சி**
121. மோனிட்டா கிறிஸ்டி
122. மேத்யூ விவேக்
123 டோனி

**ஆறுமுகநேரி**
124. ஜெயராணி
125. தொம்மை அந்தோணி

**ஆலந்தலை**
126. மரியம்மாள்
127. தங்கராஜ் பொன்சேகர்
128. சகாயராணி

**கோட்டார்**
129. லிமோசா

**கோயம்புத்தூர்**
130. நவீன் சார்லஸ்
131. ராஜேந்திரஅருள்

**திருப்பூர்**
132. பிரான்சிஸ் ஆர்லன்
133. ததேயுஸ் கரோலின்

**சிவகாசி**
134. ஜெர்லின்

**வீரபாண்டியன் பட்டணம்**
135. ராகேல் ராயன்

**தருவைக்குளம்**
136. லில்லிசோபியா
137. ஜோஸ்பின் ஷீலா
138. மைக்கேல் ஸ்டிபானி

**கயத்தார்**
139. அமல்ராஜ்

**மதுரை**
140. ஜெஸிந்தா மேரி
141. சகோ. ஜான்சி மேரி

**உடன்குடி**
142. ஸ்நோவின்

**புதியம்புத்தூர்**
143. ஹெலன் அன்னமணி

**சூலூர்**
144. சத்யா சேவியர்

**சருகணி (சிவகங்கை)**
145. சகோ. பெரைறா

**திண்டுக்கல்**
146. ஜெர்மேன்
147. ரோசாலி

**உவரி**
148. ஆர்லின் ஈவ்லின்

**தேனி**
149. கரோலின் பிலவேந்திரன்
150. ரொசாரியோ மேரி ஈவ்லின்

### தூத்துக்குடி நகர பங்குகள்

**திரு இருதயங்களின் பேராலயம்**
151. ரமோலா கமிலஸ்
152. கிரேட்டா ராஜா
153. ஜெயா ஃபெலிக்ஸ்
154. ஸ்நோசன்
155. ரெனிஷா ஜெப்ரி
156. பெஸ்டஸ் மச்சாது
157. ஜெயந்தி பீட்டர்
158. இருதயம்மாள்

**குருஸ்புரம்**
159. ஆசிர்வாதம்
160. பௌவுசி ஜோ மைக்கேல்
161. பிளாசி செல்வராஜன்
162. மாசில்லா

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
163. டோமினிக்
164. டார்லிமா அமுதன்

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
165. செக்கரியா சாமுவேல்
166. சலேத் எலிசா

**யூதா ததேயு கோவில்**
167. ரோஸ் சேவியர்
168. இம்மானுவேல் சேகர்
169. ஜெனட் சேவியர்
170. ஆரோக்கிய சர்மிளா
171. சகாயமேரி
172. லூர்து சுவிதா

**அந்தோணியார் கோவில்**
173. இருதயம்மாள் கபிரியேல்
174. வயோலா ஜான்சன்
175. டயானாவினோத்
176. மகேஷ் சுஜாதா
177. ரீடன்

**காந்தி நகர்**
178. ரியாலினோ
179. கிளமென்சியா மேக்டன்
180. பிண்டன் சோபியா
181. ரமேஷ் நர்மதா
182. சாந்தினி
183. செலஸ்டின்
184. பேபி வால்ட்டர்

**அண்ணா நகர்**
185. வென்சி ராணி

**சார்லஸ் கோவில்**
186. சகாயிட்டா மச்சாது
187. அல்போன்சா பர்னான்டோ
188. ரூபி ஏஞ்சல்

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
189. சூசை நெவின்
190. பாத்திமா ஏஞ்சலின்
191. மரிய சூசை ரூபி
192. சகோ. லோராமேரி

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
193. வெர்ஜின்
194. தயாபர ராணி

**திரேஸ்புரம்**
195. கோல்வின் ஜேசுராஜ்
196. ஸ்நோ வெண்பா
197. கிருபா
198. ஆடன் ஸ்டேரிஷ்
199. அபின்சா

**பாத்திமா நகர்**
200. ஷர்மிளா ரமேஷ்
201. மேரி ஹம்லின்



**கடந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 195**

**இந்த மாதம்**
**சரியான விடை எழுதியவர்கள் : 201**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல்)

ஜுலை 2026

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

### நிகழ்ந்தவை

★ **30.05.2026 சனிக்கிழமை** மாலை 06.30 மணிக்கு தேரோடும் வீதிகளில் அன்னையின் **சப்பரப் பவனியும், செபமாலைப் பவனியும்,** தொடர்ந்து தூய கன்னி மரியா எலிசபெத்தை சந்தித்த திருவிழாவுக்கான மாலை ஆராதனையும் திவ்விய நற்கருணை ஆசீரும் பேராலயத்தில் நடைபெற்றன.

★ 07.06.2026 ஞாயிற்றுக்கிழமை **இயேசுவின் தூய்மைமிகு திருவுடல், திருஇரத்தப் பெருவிழா**வை முன்னிட்டு காலை 10.30 மணி முதல் மாலை 04.00 மணி வரை நமது பேராலயத்தில் தொடர் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. பங்கின் பக்த சபையினர் இதனை வழிநடத்தினார்கள்.

★ **08.06.2026 திங்கள்கிழமை** மாலை பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிப் பேரவையின் நிதிக்குழு மற்றும் செயற்குழுக் கூட்டங்கள் நேவிஸ் அரங்கத்தில் நடைபெற்றன.

★ 13.06.2026 சனிக்கிழமை **புனித அந்தோனியார் திருவிழா**வை முன்னிட்டு மாலை 05.30 மணி திருப்பலி புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் திருவிழா சிறப்புத் திருப்பலியாக நடைபெற்றது.

★ **14.06.2026 ஞாயிற்றுக்கிழமை** காலை 06.30 மணி திருப்பலியின் முடிவில் நமது பங்கைச் சார்ந்த **பத்தாம், பனிரண்டாம் வகுப்புகளில்** அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணாக்கர்களுக்கு ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன.

★ **16.06.2026 செவ்வாய்கிழமை** பேராலயப் பங்குமேய்ப்புப் பணிப் பேரவையின் பொதுக்குழுக் கூட்டமானது மாலை 07.00 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. பெருவிழா தொடர்பான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★ 21.06.2026 முதல் ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகள் மீண்டும் தொடங்கப்பட்டன.

### நிகழ இருப்பவை

★ **03.07.2026 மாதத்தின் முதல் வெள்ளி** நோயாளர்கள், முதியோருக்கு இல்லங்களில் நற்கருணை வழங்கப்படும்.

★ **04.07.2026 மாதத்தின் முதல் சனி** மாலையில் சப்பரப் பவனியும், நவநாள் வழிபாடும் நடைபெறும்.

## வழியனுப்புகிறோம்!



நமது பங்கிலிருந்து பணிமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, அடைக்கல அன்னை சபையைச் சேர்ந்த **தலைமை அருட்சகோதரி பெர்னதெத் மேரி, அருட்சகோதரி கிறிஸ்டி ராணி, அருட்சகோதரி நம்பிக்கை மேரி** மற்றும் அமலவையைச் சேர்ந்த **அருட்சகோதரி மேரி** ஆகியோரை வாழ்த்தி, வழியனுப்புகிறோம். சேசு சபை துறவிகள் இல்லத்தில் பணியாற்றிய **அருட்தந்தை அமலதாஸ் சேவியர்** மற்றும் **அருட்தந்தை அருளானந்தம்** ஆகியோரையும் வாழ்த்தி வழியனுப்புகிறோம்.



## வரவேற்கிறோம்!

நமது பங்கிலுள்ள அடைக்கல அன்னை சகோதரிகள் இல்லத்திற்கு பணியாற்ற வந்துள்ள **தலைமை அருட்சகோதரி சிறுமலர், அருட்சகோதரி ஞான ஆரோக்கிய செல்வி** மற்றும் சேசு சபை துறவிகள் இல்லத்திற்கு பணியாற்ற வந்துள்ள **அருட்தந்தை செபாஸ்டின் ஜெரால்டு, அருட்தந்தை பவுல் பெனடிக்ட்** ஆகியோரை வாழ்த்தி வரவேற்கிறோம்!

# பனிமய சாட்சியம்



### ராணி, லயன்ஸ் டவுன்

**2023**ஆம் ஆண்டு நடைபெற்ற தங்கத்தேர் திருவிழாவின்போது எனது மகளுக்கு நல்ல திருமண வரன் அமைய வேண்டி பனிமயத் தாயிடம் மன்றாடி வேண்டினேன். அந்த ஆண்டு நவம்பர் மாதமே நல்ல வரன் அமைந்தது. நேர்ச்சையாக தாய்க்கு மாந்தை செலுத்தி நன்றியைத் தெரிவித்தேன். **2024**ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அழகான ஆண் குழந்தையை பனிமயத் தாய் கொடுத்தார். இவ்வாறு என் மகளின் வாழ்வை வளமுறச் செய்த அன்னைக்கு என் கோடானகோடி நன்றியை சாட்சியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### ஆரோக்கிய யேசு ராஜா, வேலூர், சென்னை

**2013**ஆம் ஆண்டு நடைபெற்ற தங்கத்தேர் திருவிழாவில் நாங்கள் குடும்பமாக கலந்துகொண்டு எங்களுக்கென்று ஒரு நல்ல தனி வீடு அமைய வேண்டி பனிமயத் தாயிடம் மன்றாடி வேண்டினோம். வேண்டுதல் வைத்த மூன்று மாதத்திலேயே எங்களுக்கான வீடொன்றை அன்னை அற்புதமாகத் தந்தார். **13** ஆண்டுகளுக்குப் பிறகு **2026**ஆம் ஆண்டு பனிமய அன்னையைச் சந்தித்து எங்களது நன்றியை காணிக்கையாக்கி சாட்சியாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பனிமய பல்சுவை நிகழ்ச்சி 2026

நம் பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பெருவிழா நாள்களின் போது ஒவ்வொரு நாளும் மாலை 04.30 மணி முதல் 05.30 மணி வரை சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும், ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும் பின்வரும் சிறப்பு நிகழ்வுகள் ஒளிபரப்பப்பட உள்ளன.

## 1. காலச் சுவடுகள்

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்குத்தந்தை அருட்பணி. ஜான் செல்வம் அவர்களால் வழங்கப்படும் பேராலய வரலாறு மற்றும் மரியன்னை பற்றிய அரிய தகவல்கள் காணொளியாக ஒளிபரப்பப்படும்.

## 2. மரியன்னைப் போட்டிகள்

பேராலயப் பங்கு குழந்தைகள் பங்கேற்ற மரியன்னை மாறுவேடப் போட்டி, ஓவியப் போட்டி, மரியன்னை பேச்சுப் போட்டி, குழு நடனப் போட்டி ஆகியவற்றின் வெற்றியாளர்களது படைப்புகள் ஒளிபரப்பப்படும்.

## 3. தாய்க்குப் புகழ்

தூத்துக்குடி நகரப் பங்குகளின் பாடகர் குழுவினர் நம் தாயைப் புகழ்ந்து பாடும் மரியன்னைப் பாடல்கள் ஒளிபரப்பப்படும்.

## 4. உங்களுக்குத் தெரியுமா?

மரியன்னை தொடர்பான சுவையான கேள்விகளுக்கு வாட்சப் வழியாக பதில் சொல்லுங்கள். எல்லா நாள்களிலும், எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில்களைச் சொல்லும் அன்னையின் பிள்ளைகளுக்குப் பரிசுகள் காத்திருக்கின்றன.

## 5. பாடிப் புகழ்வோம்

இசைக்கலைஞர்கள் சகோ. ஜோ மற்றும் சகோ. பிரபாகர் அவர்களது இசையில், விஜய் தொலைக்காட்சியின் "சூப்பர்சிங்கர்" நிகழ்ச்சி வழியாகப் புகழ்பெற்ற சகோ. இர்வின் விக்டோரியா நம் மனம் கவர்ந்த மாதா பாடல்களைப் பாடுவார்.

## 6. நேற்று இன்று நாளை

அன்னையின் பெருவிழா நிகழ்வுகள் பற்றிய அறிவிப்புகள், நினைவூட்டல்கள், பாராட்டுகள் இடம்பெறும்.

## செபிக்கின்றோம்

### இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 18. | ஊர்சுலம்மாள் | சேவியர் பர்னான்டோ | 01.06.2026 | இராயப்பர் |
| 19. | ஜெயபிரிட் | அகஸ்டின் | 05.06.2026 | பனிமயம் |
| 20. | ரொசாரி | பிரேம்நாத் | 15.06.2026 | இரக்கத்தின் மாதா |

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"நேர்மையுள்ளோர் மக்கள் மனத்தில் என்றும் வாழ்வர்" (திபா 112:6).



பிறப்பு
09.05.1942

இறப்பு
02.07.2025

# S. BRYNA VAZ

Rtd. Teacher (Chennai)

பிரிவால் துயருறும்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

*No. 35/1, கிரகோப் தெரு, தூத்துக்குடி.*
*அலைபேசி : 93601 12994*

## விண்ணக வாழ்வின்

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்.
அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்.
(திபா 23:2)



**மண்ணில்**
**19.03.1949**

**விண்ணில்**
**21.07.2025**

# T. ஜோபாய் பர்னாந்து

**வயது : 76**

*இறைவா நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும்.*
*முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.*
*இவரது ஆன்மா சாந்தி பெறுவதாக.*

**பிரிவால் வருந்தும்**

மனைவி : **J. சகாயராணி**
**மகள், மகன், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்**
**மற்றும் குடும்பத்தினர்**

2, தெற்கு எம்பரர் தெரு, தூத்துக்குடி.

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே.
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்.
(யோவான் 11:25)



**பிறப்பு**
**21.05.1956**

**இறப்பு**
**24.07.2023**

# F. பிரமிளா பர்னாந்து

*நான் பார்த்த முதல் பௌர்ணமி நிலவு நீதான் அம்மா....*
*நான் இருளின் பயத்தில் இருக்கும்போது உன் நிலவு முகத்தின்*
*வெளிச்சமே எனக்கு துணை அம்மா....*

*நான் இந்த உலகில் எங்கே சுற்றினாலும் உன்னோடு இருந்த*
*நினைவுகள் தான் என் ஆறுதல் அம்மா....*

*காலத்தின் மாற்றம் நிலவின் வளர்பிறை தேய்பிறை*
*என் மனதில் என்றும் மூன்றாம் பிறை நிலவு நீதான் அம்மா....*
*என் அழகு பெத்தாருக்கு*
*மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி*

**பிரிவால் துயருறும்**

கணவர் : **A. பிரான்சிஸ்**

**மகன்கள், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்**
**மற்றும் குடும்பத்தினர்**

# 4th Year Remembrance



**Born**
**10.08.1957**

**Died**
**09.07.2022**

# Capt. F.T. MERCIAN FERNANDO

**Loving Husband, Father and Grandfather**

*We thank the Lord for you every single day and night.*
*We remember you throughout our days*
*and miss you in all our little milestones.*
*We pray that you find eternal joy, peace*
*and rest in our Lord's divine paradise.*

*We miss you more than words can say.*

---

*Bereaving wife, daughters, family*
*and loved ones.*

# ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி



பிறப்பு
09.05.1945

இறப்பு
28.07.2020

துபாய்

## P. மைக்கேல் பர்னாந்து

வயது : 75

*மறக்க முடியாத உறவும் நீதான்.*
*வெறுக்க முடியாத உறவும் நீதான்.*
*நீ இருப்பதோ தொலைதூரத்தில்....*
*உன் நினைவுகள் இருப்பதோ*
*என் விழி ஓரத்தில் கண்ணீராக....*

என்றும் உங்கள் நினைவில் நிற்கும் மனைவி

**S. சேசம்மாள் பி.ராயர்**

"நேர்மையாளர் தம் தந்தையின் ஆட்சியில்
கதிரவனைப்போல் ஒளிவீசுவர்" *(மத் 13:43)*

விண்ணக வாழ்வின் 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

Born
1926



Died
11.07.2008

# S. THOMMAI ANTONY FDO

100ஆம் ஆண்டு பிறந்த நாள் நினைவு

15ஆம் ஆண்டு நினைவு



**M. BASALIAMMAL CARDOZA**
Born : 1928
Died : 20.05.2011

6ஆம் ஆண்டு நினைவு



**T. WILLINGTON**
Born : 21.07.1950
Died : 06.09.2019

பிரிவால் துயருறும்

மகன்கள், மகள்கள், தம்பிகள், தங்கைகள்
மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள்
கொள்ளு பேரன், கொள்ளு பேத்தி

## தூத்துக்குடி

# பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்

ஏழுகடல் துறைக்கும் திருமந்திர நகருக்கும் சந்தோஷமான

## திவ்விய சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவின்

## பெருவிழா நிகழ்வுகள்

444 ஆம் ஆண்டு

## 2026



| | |
|---|---|
| 25.07.2026 - சனி | சிறப்பு கொடிப் பவனி |
| 26.07.2026 - ஞாயிறு | திருப்பலி, கொடியேற்றம்<br>அன்னைக்குப் பொன் மகுடம் சூட்டுதல் |
| 02.08.2026 - ஞாயிறு | புதுநன்மைத் திருப்பலி<br>திவ்விய நற்கருணைப் பவனி |
| 04.08.2026 - செவ்வாய்<br>மாலை 07.00 மணி | **பெருவிழா மாலை ஆராதனை**<br>தலைமை : மேதகு ஆயர் **ஸ்டீபன்** ஆண்டகை<br>மறையுரை : மேதகு ஆயர் **நசரேன் சூசை** ஆண்டகை |

## 05.08.2026 - புதன் - அன்னையின் பெருவிழா

| | |
|---|---|
| காலை 04.30 மணி : | முதல் திருப்பலி |
| காலை 05.30 மணி : | 2-ஆம் திருப்பலி |
| காலை 07.30 மணி : | பெருவிழாத் திருப்பலி<br>மேதகு ஆயர் **ஸ்டீபன்** ஆண்டகை |
| காலை 09.00 மணி : | 4-ஆம் திருப்பலி<br>பேரருள்தந்தை **ரவிபாலன்** |
| காலை 10.00 மணி : | 5-ஆம் திருப்பலி<br>மேதகு ஆயர் **இவோன் அம்புரோஸ்** ஆண்டகை |
| நண்பகல் 12.00 மணி : | 6-ஆம் திருப்பலி<br>மண்ணின் மைந்தர்கள் |
| மாலை 05.00 மணி : | பெருவிழா நிறைவுத் திருப்பலி |
| இரவு 07.00 மணி : | பரிசுத்த பனிமயத் தாயின் திருவுருவப் பவனி |
| இரவு 10.00 மணி : | பரிசுத்த பனிமயத் தாய்க்கு குடும்பங்களை ஒப்புக்கொடுத்தல் |

### நவநாள்களில்

காலை 04.30 மணி
செபமாலை
தொடர்ந்து திருப்பலிகள்

மாலை 03.00 மணி
தேர்ஸ், செபமாலை,
மறையுரை, அருளிக்க ஆசீர்

இரவு 07.15 மணி
செபமாலை, பிரார்த்தனை,
திவ்விய நற்கருணை ஆசீர்

*அன்னையின் பிள்ளைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்*

**அருள்பணி. ஜான் செல்வம்,** அதிபர், பங்குத்தந்தை
**அருள்பணி. ஜெரால்டு,** உதவிப் பங்குத்தந்தை
**அருள்சகோ. மைக்சன்,** களப் பணியாளர்

**துறவியர்**
**பங்கு மேய்ப்புப் பணிக்குழுவினர்**
**பக்த சபையினர், இறைமக்கள்**

SHINY Ph : 98421 31493